

துறைமுகம் மேற்குப் பகுதி, 57 (அ) வட்ட முன்னாள் பொருளாளர் எஸ்.பாண்டுரங்கன் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, 5 வது மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீ ராமமுலு, மாவட்ட துணை செயலாளர் ஜி.எம்.தேவன்,மற்றும் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் மாவட்ட நெசவாளர் அணி மற்றும் ஒன்றிய இளைஞரணி சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி மற்றும் கால்பந்து போட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி சென்னீர் குப்பம் ஊராட்சியில் ஒன்றியச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் நா.சண்முகம், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க.பரிமேலழகன் வரவேற்பில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு ராயல் என்ஃபீல்டு மற்றும் ஹீரோ ஹோண்டா பைக் டிவி உள்ளிட்ட பல்வேறு நல திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நாளை (11-ஆம் தேதி) செங்கல்பட்டில் நடைபெறும் மாபெரும் விழாவில் 50,606 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - திருக்கழுக்குன்றம் - செங்கல்பட்டில் மாபெரும் வரவேற்பு!

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தினருக்கு – மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*காஞ்சிபுரம், மார்ச் 10*

செங்கல்பட்டில் நாளை (11-ஆம் தேதி) காலை நடைபெறும் மாபெரும் விழாவில் 50,606 பயனாளிகளுக்கு ரூ.1,285 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கிட வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திருக்கழுக்குன்றம் மற்றும் செங்கல்பட்டில் சாலை ஓரம் மக்கள் அணிவகுத்து நின்று மாபெரும் வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மக்கள் பயனடையும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் விழா நாளை (11-ஆம் தேதி) காலை 10.00 மணியளவில் செங்கல்பட்டு நகரில் அமைந்துள்ள மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக விளையாட்டுத் திடலில் நடைபெற உள்ளது.

இந்த விழாவில் கழகத் தலைவர் தமிழ்நாடு



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று 50,606 பயனாளிகளுக்கு, ரூ.1,285 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்த விழாவில் பங்கேற்பதற்காக கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் நாளை (11-ஆம் தேதி) கிழக்கு கடற்கரை சாலை வழியாக காலை 8.30 மணியளவில் திருக்கழுக்குன்றம் வந்தடைகிறார்.

முதலில் திருக்கழுக்குன்றத்தில்,மாமல்லபுரம் சாலையில் நடைபெறும் மக்கள் சந்திப்புவரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2 கி.மீ. நடந்து சென்று மக்களை சந்திக்கிறார்.

திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள ஒன்றிய நகர பேரூர் கழகத்தினர் அணிதிரண்டு இந்த மக்கள் சந்திப்பு வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருக்கழுக்குன்றம் மக்கள் சந்திப்புவரவேற்பு நிகழ்ச்சிக்கு பின்பு அவர் திருக்கழுக்குன்றம் - செங்கல்பட்டு சாலை வழியாக, காலை 9.00 மணியளவில் செங்கல்பட்டு நகரில் உள்ள இராட்டினகிணறு சந்திப்பு மேம்பாலத்தை வந்தடைகிறார்.

செங்கல்பட்டு நகரில் இராட்டினகிணறு சந்திப்பு மேம்பாலத்தில் இருந்து சி.எம்.சி மருத்துவமனை திருமணி சந்திப்பு வரை வழிநெடுகிலும் சாலையின் இடது புறம் திரண்டு நிற்கும் மக்களை 2 கி.மீ. நடந்து சென்று சந்திக்கிறார்.

செங்கல்பட்டு, ஆலந்தூர், திருப்பெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம் ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கியுள்ள ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகத்தினர் தமது கரங்களில் கழகக் கொடி வரவேற்பு பதாகைகளை ஏந்தி ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு பங்கேற்று சிறப்பித்திட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்கள்தரும் உற்சாகவரவேற்பிற்கு பின்பு, செங்கல்பட்டு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக மைதானத்தில் நலதிட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு பங்கேற்றிட வேண்டும் என்றும், அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருக்கழுக்குன்றம் மற்றும் செங்கல்பட்டில் நடைபெறும் மக்கள் சந்திப்பு வரவேற்பு நிகழ்ச்சியில் கழகத்தினர் ஆயிரக்கணக்கில் வழிநெடுகிலும் திரண்டு நின்று மேளதாளம் பேண்டு வாத்தியம் அதிர்வேட்டுகள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.

எனவே காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய நகர பேரூர் சிற்றூர்களில் இருந்தும் கழகத்தினர் அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் லட்சியக் கொடியேந்தி நாளை (11-ஆம் தேதி) காலை திருக்கழுக்குன்றம் மற்றும் செங்கலபட்டில் நடைபெறும் மக்கள் சந்திப்பு வரவேற்பு நிகழ்ச்சியில் கழகத்தினர் அனைவரும் அலைகடலெனத் திரண்டு வாரீர் ! வாரீர் ! என அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

### “இதயம் இணையும் இல்லறம்! உதயம் வாழ்த்தி ஒளிதரும்!”

# நிச்சயிக்கப்பட்ட இணையர்களுக்கு - சென்னை கலைவாணர் அரங்கில் திருமணம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்!

### சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை,மார்ச்.10-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 18, இதயம் இணையும் இல்லறம்! உதயம் வாழ்த்தி ஒளிதரும்!! எனும் தலைப்பில் நிச்சயிக்கப்பட்ட இணையர்களுக்கு 12.03.2025 அன்று காலை 9.00 மணியளவில், சென்னை, சேப்பாக்கம், கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இத்திருமண விழாவில் பகுதி கழகச் செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார். எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், ஜி.எம்.தேவன், பி.ஸ்ரீராமுலு, இசட். ஆசாத், எம்.விஜயகுமார், என்.பி.எம். சேக்அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், பி.விஜயகுமார், பிரதீப்குமார், ராஜேஷ் ஜெயின், வெ.பரிவீன் முன்னிலை, பா.தீ.

துறைமுகம் மேற்கு கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: மா.ஜெய்சங்கர், பா.கதிரவன்,

ஆர்.ரவிச்சந்திரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார், கே. கவியரசு ஆ.நா.பார்த்திபன், பா. அண்ணாதுரை, ஜி.ராமமூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் திருமண விழாவில், நிச்சயிக்கப்பட்ட இணையர்களுக்கு - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

மேலும், இத்திருணவிழாவில் மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி, டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ,

அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, கே.எஸ்.எம். நாதன், சி.மகேஷ்குமார், வே.உமாகாந்த், ஆர்.வரதன், எஸ்.மணிமுடி, சங்கரிநாராயணன். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவஹர், புனிதவதி எத்திராசன், பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதான், எ.நாகராசன், எம்.சி, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வே.வாசு, கூ.பி.ஜெயின், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர்,

டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜன், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், வானவில் விஜய், ந.துலுக்கானம், பி.உதயசங்கர், தாமோதரன், எல்.பி.எப். மோகன், பெரோஸ் கான், கா.ராஜ்முகமது, இரா.வீரமணி, ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், துரைக்கண்ணன், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி, கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம். பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், பூக்கடை. எஸ்.வெங்கடேசன், எல்.சாந்திலால். ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் சேப்பாக்கம்.வே.பா.பிரபாகரன் டி.சதிஷ்குமார், நன்றி கூறுகிறார்கள்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் ‘அமுத கரம்’ 18-வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, மார்ச் 10 -*

முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 18 ஆம் நாளான - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளில் நேற்று ( 9.3.2025) வில்லிவாக்கம் கிழக்கு பகுதி 1) கே.கே.நகர், அயனாவரம், சென்னை (98 அ வட்டம்) 2) தாகூர் நகர், முதல் தெரு, அயனாவரம் சென்னை (96வது வட்டம்) ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் அ. வெற்றி அழகன், வே.வாசு, கூ.பீ. ஜெயின், லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வட்டச் செயலாளர்கள்: எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயான், க. சுகுமாரன், மா.அகிலன், ஜானி (எ)உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகு பாபு இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் : சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம. அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### க.ஜெயராமன் தலைமை! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

# பெரம்பூர் 44(அ) வட்டம் ஆர்.எஸ்.மனோகரன் படத்திறப்பு நிகழ்ச்சி!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைக்கிறார்!

*சென்னை, மார்ச் 10-*

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்குப் பகுதி 44 (அ) வட்ட கழகச் செயலாளர் ஆர் .எஸ்.மனோகரன் நினைவேந்தல் மற்றும் திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி 11.3.2025 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 6 மணிக்கு எண் 28/23, ஆசிரியர் வேலாயுதம் தெரு, சத்தியவாணி முத்து நகர், வியாசர்பாடியில் நடைபெறுகிறது.

44 ‘அ’ வட்டக் கழக நிர்வாகிகள் சி.கே. பஞ்சாட்சரம், எஸ்.அருள், பி.சசிகுமார், டி. ரீட்டா, ஜி.ஆரிய சங்கர், ந.சேகர், மு. மாரிமுத்து, மு. ராமலிங்கம், கே.சேக் அப்துல் ஹக், பி.கோபி ஆகியோர் துவக்க உரையாற்றுகின்றனர்.

கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. நரேந்திரன், சென்னை வடக்கு மாவட்ட பொருளாளர் வி.தயாளன், மாமன்ற உறுப்பினர் ந.சர்ப ஜெயதாஸ், பகுதிக் கழக நிர்வாகிகள் மு.சாகுல் ஹமீது, எஸ்.சாக்ரடீஸ், வி.வேதா, ஆர்.ஜோதிமணி, வி.எஸ்.பிரபு, பெரம்பூர் தெற்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் த.ஆறுமுகம், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி எம்.சி. , க.பாபு, ஜி.மாரிமுத்து, கேபிள் கே.தினகரன், வி.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருஉருவப் படத்தை கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ் பாரதி திறந்து வைக்கிறார். சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர். டி.சேகர், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, பெரம்பூர் வடக்கு செயலாளர் அ.முருகன், தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நினைவேந்தல் நிகழ்வில் இரா.கருணாநிதி, எஸ்.ஆர். கமலக்கண்ணன், ஏ. தமிழ்ச்செல்வன், டி.கமலக்கண்ணன், ப.மதிவாணன், க.அமுல், சி. ஆனந்தி எம்.சி., க.சர்மிளா, காந்தி எம்.சி. , நா.சேகர்,

பெரம்பூர் வடக்குப் பகுதி நிர்வாகிகள் அ.ஜியாவுதீன், இரா.லீலா, வேலு, எம்.லதா, எ.செந்தூரப் பாண்டியன், பெரம்பூர் வடக்குப் பகுதி வட்டக் கழக செயலாளர்கள் கே.வி.ராஜன், என்.கார்த்திபன், மு.உமாபதி, இரா.அரிதாஸ், கே.இ.செந்தமிழ் அரசு, சி.எஸ்.ரவி மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

### சென்னை தரமணியில் உள்ள – உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு

# மொரீசியஸ் முன்னாள் துணை ஜனாதிபதி பரமசிவம் பிள்ளை வையாபுரி வருகை!

## பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடத்தைப் பார்வையிட்டார்!

*சென்னை, மார்ச் 10*

தமிழியல் உயராய்வுகளுக்கென்று தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது சென்னை தரமணியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். இந்நிறுவனத்திற்கு, மொரிசீயசு நாட்டின் மேனாள் துணை ஜனாதிபதி பரமசிவம் பிள்ளை வையாபுரி அவர்கள் 08.03.2025 அன்று வருகை புரிந்தார்.

நிறுவனப் பணிகளையும் ஆய்வுப் பணிகளையும் கேட்டறிந்த அவர், நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடத்தைப் பார்வையிட்டார். இங்கு உருவாக்கப்பட்டுள்ள தொல்காப்பியர் அரங்கு, திருவள்ளுவர் அரங்கு, ஔவையார் அரங்கு, இளங்கோவடிகள் அரங்கு, கபிலர் அரங்கு, தமிழ்த்தாய் ஊடக அரங்கு ஆகியவற்றைப் பார்வையிட்டு, பொருண்மைகளின் சிறப்புகளைக் கேட்டறிந்தார்.

தொல்காப்பியர் அரங்கில், நிறுவன மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களிடையே உரையாற்றிய அவர், தமிழினப் பண்பாடு குறித்தும் இலக்கண இலக்கியச் சிறப்புகள் குறித்தும் எடுத்துரைத்தார். உலகத் தமிழர் பரவல் குறித்துப் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள புடைப்பு ஓவியத்தைப் பார்வையிட்டு, தமிழ்நாட்டில் சேலம் மற்றும் திருச்சியில் அவர்தம் பெற்றோரின் பூர்வீகம் குறித்தும் தற்போது மொரிசீயசில் வாழ்ந்து கொண்டிருப்பதையும் நெகிழ்ச்சியுடன் பதிவு செய்தார்.

வாழ்வியல் காட்சிக்கூடம், தொல்தமிழர்களின் பண்பாடுகளையும் விழுமியங்களையும் அறிவுத் துறைகளையும் உலகிற்குப் பறைசாற்றி நிற்பதாகவும், அதேபோல, நிறுவனத்தில் பல்வேறு தமிழ்ப் பணிகள் முன்னெடுக்கப்படுவது மகிழ்ச்சியளிப்பதாகவும் பாராட்டினார்.

முன்னதாக, நிறுவனத்தின் வரலாறு குறித்தும் அதன் செயல்பாடுகள் குறித்தும் நிறுவனத் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன், நிறுவன இயக்குநர் (கூ.பொ.) ஸ்டாலின் கோபிநாத், பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடப் பொறுப்பாளர் முனைவர் ஆ.மணவழகன், நிறுவனப் பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் உடன் இருந்தனர்.



கோடை வெப்பம் தணிக்க சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி திமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி சிந்தாதிரிப்பேட்டை அருணாச்சல தெரு சிங்கன்ன தெரு சந்திப்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை சேப்பாக்கம் பகுதி கழக செயலாளர் எஸ்.மதன்மோகன் எம்.சி துவக்கி வைத்தார். உடன் கே.மகேஷ், ஆர்.ஜெகதீசன் எம்.சி., பி. பிரபாகரன், எம்.சின்னராஜ், ஏ.தமிம்அன்சாரி, ஜி.வெங்கடேசன், எஸ். ஹெச் ரஹ்மத்துல்லா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் அரும்பாக்கம் த.வெற்றி தலைமையில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் நாஞ்சில் சம்பத் மற்றும் இளம் பேச்சாளர் ஜெயகுமரேஷ் உரை ஆற்றினர். இதில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் ந.இராமலிங்கம், கார்த்திக் மோகன், தூத்துகுடி எஸ்.ஜோயல், பா.பிரகாஷ், ந.அதியமான், இரா.பொன்னுரங்கம், இரா.நவீந்திரகுமார், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.